உ சிவமயம்

அருள்மிகு தெண்டாயுதபாணி துணை

# நவராத்திரி அலங்கார விளக்கம்




## முதல் நாள் அலங்காரம்

### இராஜாங்கம்

ஆண்டிக்கோலம் பூண்ட முருகனை அரசனாகக் காண்பது. படை,குடி,கூழ்(நிதி). அமைச்சு, நட்பு, அரண் ஆகிய ஆறு அங்கங்களாகக் கொண்டு செங்கோல் கையில் ஏந்திச் சிம்மாசனத்தில் வீற்றிருந்து நம்மைக் காப்பாற்றும் காவலன் முருகன் என்பதைக் காட்டுவது.




## இரண்டாம் நாள் அலங்காரம்

### வெண்ணைதாழி

முருகனை இடையர் சேரி இல்லங்களில் உறியில் உள்ள வெண்ணையைத் திருடித் தாழியில்(சட்டியில்) வைத்து உண்ணும் கண்ணனாகக் காண்பது. வெண்ணெய் என்பது நம் கள்ளமில்லாத வெள்ளை உள்ளமே. அதுவே கடவுள் நம்மிடம் விரும்பும் பொருளாகும்.




## மூன்றாம் நாள் அலங்காரம்

### மார்க்கண்டேயர்

முருகனை மார்க்கண்டேயருக்காக எமனை உதைத்த சிவனாகக் காண்பது. விதியை மதியால், இறை பக்தியால் வெல்லலாம். மர்க்கண்டேயர் சிவ பூசை செய்யும்போது எமன் வர, அவர் சிவலிங்கத்தை அணைக்க அங்கே சிவன் தோன்றிக் காலனை வென்ற காட்சி(திருக்கடவூரில்).

உ சிவமயம்
அருள்மிகு தெண்டாயுதபாணி துணை

# நவராத்திரி அலங்கார விளக்கம்




## நான்காம் நாள் அலங்காரம்

### வேணுகானம்

வேணு-மூங்கில் கானம்-இசை. அதாவது புல்லாங்குழல் இசை. முருகனைக் குழல் ஊதி இசை எழுப்பும் கண்ணனாகக் காண்பது. அவனுடைய புல்லாங்குழல் இசையில் ஆண்கள், பெண்கள், ஆடு மாடுகள், பறவைகள், மரங்கள் முதலிய அனைத்தும் மெய்மயங்கி நிற்கும் காட்சியையும் காணலாம்.




## ஐந்தாம் நாள் அலங்காரம்

### கண்ணப்ப நாயனார்

அன்பின் வடிவமாய் அமைத்து, தான் வேட்டையாடிய பன்றி இறைச்சியைச் சுட்டுத் தானே வாயில் சுவைத்துப் பார்த்து, சிவனுக்கு வைத்து வணங்கி வழிபடுகிறார் கண்ணப்பர். ஆறாம் நாள் சிவலிங்கத்தின் கண்ணில் இரத்தம் வரத் தம் கண்களைக் பிடுங்கிச் சிவனுக்கு அப்பிய கண்ணப்பருக்கு அருளிய சிவனாக முருகனைக் காணும் காட்சி.




## ஆறாம் நாள் அலங்காரம்

### ஊஞ்சல்

முருகனை அடியவர் மனமாகிய ஊஞ்சலில் ஆடும் உமை அம்மையாகக் காண்பது. இன்ப துன்பங்களுக்கிடையே தடுமாறும் மக்கள் மனம் இறைபக்தியில் நிலைக்க வேண்டும் என்பதை உணர்த்துவது.

உ சிவமயம்

அருள்மிகு தெண்டாயுதபாணி துணை

# நவராத்திரி அலங்கார விளக்கம்




## ஏழாம் நாள் அலங்காரம்

### பிட்டுக்கு மண் சுமத்தல்

மதுரையில் வைகை ஆற்றில் வெள்ளம் வர, வந்தி என்னும் பிட்டு விற்கும் கிழவிக்காகக் கூலி ஆளாய் வந்து, மண் சுமந்து, பிட்டைக் கூலியாகப் பெற்று அரசனால் சவுக்கடி பெற்ற சிவனாக முருகனைக் காணும் காட்சி. கடவுள் அன்பர்க்கு அடிபணியும் கருணையாலன் என்பதைக் காட்டும் திருவிளையாடல்.




## எட்டாம் நாள் அலங்காரம்

### காளிங்க நர்த்தனம்

யமுனை நதியில் காளிங்கன் என்னும் கொடிய விஷம் கொண்ட பாம்பை அடக்கி அதன் தலை மீது நின்று நடனம் ஆடிய கண்ணனாக முருகனைக் காட்டும் காட்சி.



## ஒன்பதாம் நாள் அலங்காரம்

### சரஸ்வதி பூஜை

கல்விக்கு அதிபதியான சரஸ்வதியே பரம்பொருளான சிவபெருமாணுக்குப் பூசை செய்து வழிபடும் காட்சி. முருகனுக்கு ஆறுமுகச்சிவன் என்றொரு பெயர் உண்டு. மறு நாள் விஜயதசமியில் (வெற்றிக்குரிய 10ஆம் நாளில்) முருகன் குதிரை வாகனத்தில் அம்பு போட உதவும் வில்லும் அம்பும் அலங்காரத்தில் இடம்பெறக் காணலாம்.

உ சிவமயம்

அருள்மிகு தெண்டாயுதபாணி துணை

# நவராத்திரி அலங்கார விளக்கம்







**பத்தாம் நாள்**

**விஜயதசமி**

வெற்றிக்குரிய 10ஆம் நாளில் முருகன் சர்வ அலங்கார நாயகராய் வெள்ளிக் குதிரை வாகனத்திலிருந்து அம்பு போடுதலும் அதனைத் தொடர்ந்து நகர் வலம் வருதலும் நடைபெறும்.





